**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2021**
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 3rd Term Examination - 2021

FWC

| மனைப்பொருளியல் Home Economics | Three Hours / Gr- 12 (2022) | 28 | T | I,II |
|---|---|---|---|---|

## பகுதி I

❖ *1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

01. தமது குடும்ப உறுப்பினர்களினதும் குடும்பத்திற்கு அப்பாற்பட்டோரினதும் எதிர்பார்ப்புக்கள் தொடர்புகள் சமூக நடத்தைகள் அல்லது விருப்பு வெறுப்புக்கள் ஆகியவற்றைக் கொண்ட சூழல்.
    1) உள்ளக வாழ்க்கைச் சூழல்  2) கிராமிய மற்றும் நகரச் சூழல்
    3) பௌதீக வாழ்க்கைச் சூழல்  4) சமூக வாழ்க்கைச் சூழல்
    5) சிறந்த வாழ்க்கைச் சூழல்

02. கண்டி நகரம் பண்பாட்டியல் ரீதியாக ஓர் உலக அருஞ்செல்வமாகக் கருதப்படுகின்றது இங்கு கட்டிடங்களை அமைக்கும்போது தலதாமாளிகையின் கூரையின் வடிவத்தை ஒத்ததாக அமையாதவாறும் அதன் உயரத்தை விஞ்சிச் செல்லாதவாறும் அமைதல் வேண்டும் இக்கருத்து பின்வரும் எப்பயன்பாட்டுக் காரணிக்கு பொருத்தமானது.
    1) பெறுமானத்தொகுதி  2) அமைப்பும் அமைவும்  3) கலைத்துவம்
    4) அளவும் விகிதசமமும்  5) பொருத்தப்பாடு

03. செயலூக்கம், சந்தம், இலலிதம், பரபரப்பு ஆகிய உணர்வுகளைக் குறிக்கும் ரேகையானது.
    1) வளைகோடு  2) சரிவுக்கோடு  3) வளைநெளிகோடு
    4) கிடைக்கோடு  5) நிலைக்குத்துக்கோடு

04. துணை வர்ணங்கள் இரண்டைச் சமவளவுகளில் சேர்ப்பதன் மூலம் மூன்றாம் நிலை வர்ணங்களைப் பெறமுடியும் ஆகவே (மஞ்சள் + சிவப்பு) + (சிவப்பு + நீலம்) – செம்மஞ்சள் + ஊதா மூலம் பெறப்படுவது.
    1) புடை மஞ்சள்  2) புடை சிவப்பு  3) புடை நீலம்
    4) புடை ஊதா  5) புடை செம்மஞ்சள்

05. நாகரிகத்தின் பொற்காலம் எனக் கருதப்படும் காலத்தில் நவீனத்துவ எண்ணக்கருவின் அடிப்படையில் அமைக்கப்பட்ட கட்டிடத் தொகுதியில் ஒன்று.
    1) தலதா மாளிகை  2) liberty Plaza  3) தேசிய அரும் பொருட் காட்சியகம்
    4) பவுஹவுஸ் (Bauhaus)  5) தாமரைத் தடாகம்

06. இயற்கைச் சூழலை மாற்றியமைத்து தாவரங்களை வெவ்வேறான வடிவங்களில் கத்தரித்தல், படிக் கட்டுக்கள் அமைத்தல் போன்றவாறு மனித செல்வாக்கின் மூலம் அமைக்கும் செயற்பாடானது.
    1) வன்நிலத்தோற்ற வடிவமைப்பு  2) மென்நிலத்தோற்ற வடிவமைப்பு
    3) சஞ்சரித்தல் தகவு  4) பௌதிக அச்சுக்கள்  5) தோற்ற அச்சுக்கள்

07. மனிதச் செயற்பாடுகளுக்குச் சௌகரியமாக அமையத்தக்க நியம அளவுகளிலான தளபாடங்களும் உபகரணங்களும் குறிப்பிட்ட இடங்களில் இடப்படுத்தப்பட்டிருத்தலானது அந்தந்த இடத்திலான செயற்பாடுகளைச் சௌகரியமாகவும் வினைத்திறனுடையதாகவும் அமையும் செயற்பாடு.

1) தொழிற்படுதன்மை
2) பொருத்தப்பாடு
3) தரநியமம்
4) சரியான செயற்றொடர்புகள்
5) பெறுமானமாகும்


08. இரண்டு மொனோ சக்கரைட்டுக் கூறுகள் இணைவதால் உருவாகுவது.

1) குளுக்கோஸ், பிறக்டோஸ், கலக்றோஸ்
2) மோல்டோஸ், மாப்பொருள், பிறக்டோஸ்
3) செலுலோசு, கிளைக்கோஜன், தெக்ரின்
4) கிளைக்கோஜன், இனியூலின், பசைவகை
5) மோல்டோஸ், இலற்றோசு, சுக்குறோசு

09. உடலினால் உற்பத்தி செய்யமுடியாத அமினோ அமிலங்களைக் கொண்ட தொகுதி முறையே.

1) அலனின், சிற்றின், மெத்தியோனின்
2) சிற்றின், குளுட்டமின், கிளைசீன்
3) கிளைசின், செரீன், அலனின்
4) இலைசீன், வலீன் இத்திடீன்
5) திரித்தோபேன், லியூசின், புரோலீன்

10. இச் சூத்திரம் காட்டும் வெல்லம்.




1) குளுக்கோசு
2) கலற்றோசு
3) புரற்றோசு
4) சுக்குரோசு
5) மோல்ட்டோஸ்

11. புரதத்தின் இயல்பு கெடலில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அமையாதது.

1) பார உலோகம்
2) செறிந்த உப்பு வகை
3) பாதகமான கதிர்ப்பு
4) செறிந்த அமிலம்
5) அளவான வெப்பம்

12. ஒரு கிராம் காபோவைதரேற்று மூலம் கிடைக்கும் சக்தியினளவை கிலோகலோரி, கிலோயூல் என்பவற்றில் குறிப்பது.

1) $9K\ cal\ \ 37.7KJ$
2) $4K\ cal\ \ 16.7KJ$
3) $4.2K\ cal\ \ 17.6KJ$
4) $4K\ cal\ \ 37.7KJ$
5) $9K\ cal\ \ 17.6KJ$

13. விற்றமின் $B_2\ B_8$ இன் இரசாயனப் பெயர்களைக் கொண்ட தொகுதி,

1) இரைபோபிளேவின், அடினோசின்
2) அடினோசின், பயோட்டின்
3) பிரிடொக்சின், நயசின்
4) போலிக்கமிலம், பென்ரத்தோனிக்கமிலம்
5) பரா அமைனோ பென்சொயிக்கமிலம், குளூட்டமிக்கமிலம்

14. இலங்கையில் முதன்முதலாக சுகாதாரப் பாதுகாப்பு போசாக்கு அமைச்சினால் போசணைக் கொள்கை வகுக்கப்பட்ட ஆண்டு.

1) 2010 2) 1986 3) 1980 4) 1981 5) 2000

15. முளைய விருத்தி, நரம்புகள், இதயம், சிறுநீரகங்கள் குருதிக்கலன்கள், நீர்ப்பீடனத் தொகுதி ஆகியவற்றின் சீரான தொழிற்பாட்டுக்கு உதவும் அத்தியாவசிய கொழுப்பமிலங்களானது,

1) தியற்றிக்கமிலம், லினோலெயிக்கமிலம்
2) அரக்கிடோனிக்கமிலம், கப்பற்றிக்கமிலம்
3) அல்பா லினோலெனிக் அமிலம், லினோலெயிக்கமிலம்
4) லினோலெனிக் அமிலம், ஒலேயிக் அமிலம்
5) பியூத்திரிக்கமிலம், பாமிற்றிக்கமிலம்

16. பெருங்குடலில் வாழும் பற்றீரியாக்கள் எவ்விற்றமின்களை உற்பத்தி செய்வதோடு குருதியினால் அகத்துறிஞ்சப்படுகின்றன.

1) விற்றமின் K, பயோட்டின் 2) விற்றமின் E, பயோட்டின்
3) விற்றமின் D, போலிக்கமிலம் 4) விற்றமின் A நயசின்
5) விற்றமின் C, பிரிடொக்சின்

17. BMI 25.0 – 30 வரை காட்டப்படுவது எவற்றைக் குறிக்கின்றது.

1) உயரத்துக்கமைய நிறைபோதுமானதன்று
2) கொழுத்த உடல் நிலை
3) உயரத்துக்குப் பொருத்தமான நிறை உள்ளது.
4) உயரத்துக்கமைய நிறை கூடுதலானது உடல் நிறையை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.
5) கொழுத்த உடல் எனும் நிலைமை உடலின் நிறையைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும்.

18.
- உடல் மற்றும் உளச்சோம்பல்
- உடல் வளர்ச்சி குன்றுதல்
- முதிர்ச்சிக்கு முன்னரே குழந்தை பிறத்தல்
- நுண்மதி வளர்ச்சியில் தடங்கல் ஏற்படல்

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் $x$ எனும் போசணைக் குறைபாடு காரண ஏற்படும் அப்போசணை யானது.

1) இரும்பு 2) அயடீன் 3) விற்றமின் A 4) நாகம் 5) கல்சியம்

19) போசணைப் பிரச்சினைகளையும் குறைபாடுகளையும் தவிர்ப்பதற்குக் கையாளக்கூடிய சரியான உணவுப் பழக்கமானது.

1) தினமும் உடற்பயிற்சி செய்தல்
2) உடற் திணிவைக் கட்டுப்படுத்தல்
3) நார்ப் பொருள்கள் அடங்கிய உணவுகளைத் தினமும் உணவுடன் சேர்த்தல்.
4) வீட்டில் தயாரித்த உணவையே உட்கொள்ளல்
5) அதிகளவு சீனி அடங்கிய இனிப்புப் பொருள்களைத் தவிர்த்தல்.

20) சிபாரிசு செய்யப்பட்டுள்ள உணவுக் கூட்டத்திற்கு அமைய கட்டிளைஞன் நாளாந்தம் உட்கொள்ள வேண்டிய பால் அல்லது பால் சார்ந்த உணவின் பரிமாறல் அளவானது (Servings).

1) 2 - 3   2) 7 - 10   3) 4 - 5   4) 1 - 2   5) 2

21) இரப்பை அழற்சி (Gastritis) ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் பற்றீரியா இனமானது,

1) சல்மொனெல்லா   2) ஸ்ரெப்ரோகோகஸ் லக்டீஸ்

2) இலக்ரிக்கமிலம்   4) ஹெலிக்கோபற்றர் பைலோரி

3) குளோஸ்டியம் பொட்டிலிசியம்

22) சேர்மானப் பொருட்களில் குழம்பாக்கிகளைக் கொண்ட தொகுதியானது.

1) பேகிங் பவுடர், மதுவம், அப்பச்சோடா
2) லெசிதீன், பொசுப்போ இலிப்பிட்டு, புரோபிலீன்
3) சோடியம் நைத்திரேற்று, பொற்றாசியம் நைத்திரேற்று, வினாகிரி
4) கொறுக்காய்புளி, பப்பாசி, பெருங்காயம்
5) எலுமிச்சை, சீனி, வினாகிரி

23) சமையல் முறைகளில் ஒன்றான ஸ்ரு செய்தலின்போது வெப்ப இடமாற்றம் நிகழும் முறையானது.

1) கடத்தல், மேற்காவுகை   2) கடத்தல், கதிர்ப்பு   3) கதிர்ப்பு, மேற்காவுகை

4) மேற்காவுகை   5) கடத்தல், கதிர்ப்பு, மேற்காவுகை

24)



மேலே படத்தில் காட்டப்பட்டுள்ள தையல் முறையானது,

1) பிரசீலியன் தையல்   2) நரம்புத்தையல்   3) சங்கிலித் தையல்

4) சற்றின் தையல்   5) கம்பளித் தையல்

25) செலுலோசை அடிப்படையாகக் கொண்ட நாரானது எந்த நார் வகையினுள் அடங்கும்.

1) செயற்கை நார் பல்பகுதியம்   2) விசேடமான நார்

3) மீளப் பிறப்பித்த நார் / குறை தொகுப்பு நார்)   4) விலங்குநார்   5) கனியநார்

26) கைக்குட்டை, துடைதுண்டு ஆகியவை கூடுதலாக எவ்நெசவினை அடிப்படையாகக் கொண்டு நெய்யப்படும்.

1) பாய்நெசவு   2) சாதாநெசவு   3) பாவுவிலாநெசவு

4) ஊடை விலாநெசவு   5) சரிவுக்கோட்டு நெசவு

27) மெல்லிய ஏவப்படட காபன் படையொன்று (Active Carbon Coating) இடுவதால் மேற்கொள்ளப்படும் நேர்த்தியாக்கல் ஆனது.

1) குண்டு துளைக்கா நேர்த்தி
2) இரசாயனப் பொருளை சகிக்கும் நேர்த்தி
3) கதிர்ப்பைச் சகிக்கும் நேர்த்தி
4) தீயெதிர்ப்பு நேர்த்தி
5) பற்றீரியா எதிர்ப்பு நேர்த்தி

28) பத்திக் முறையில் சாயமூட்டுவதற்கு பயன்படுத்தப்படும் துணி வகையனது.

1) பருத்தி, நைலோன், பொலிஎதிலீன்
2) பருத்தி, லினன், பட்டு
3) பட்டு, கம்பளி, ரெயோன்
4) பொலியெசுத்தர், பருத்தி, பட்டு
5) பொலி அக்ரிலிக், பொலி புரொப்பலின், சிசல்சணல்

29) வாய்மொழி மூல தொடர்பாடலின் பிரதிகூலமானது பின்வருவனவற்றில்.

1) செய்தியைப் பெறுபவரின் கொண்ணிலை, நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றை அவதானிக்க முடியாது
2) துலங்கல் மிக விரைவாகக் கிடைக்காமை
3) நிரூபிக்கக்கூடிய ஆற்றல் குறைவானது
4) விரைவாக தொடர்பாடலை மேற்கொள்ளமுடியும்
5) செய்தியைப் பெறுபவரின் கொண்ணிலை மற்றும் நடத்தைகளை அவதானிக்க முடிதல்.

30) நேர்முகப் பரீட்சையின்போது பேணவேண்டிய நடத்தைகள் மிக முக்கியமானது இவற்றில் செய்யத்தகாத நடத்தைக் கோலமானது.

1) நன்கு செவிமடுத்து ஐயமின்றிப் பதிலளித்தல்
2) ஆசனத்தில் நிமிர்ந்து அமர்ந்திருத்தல்
3) காலின் மீது கால்போடாது அமருதல்
4) குரலை உயர்த்திப் பேசுதல்
5) நேர்முகப் பரீட்சைக்கு ஏற்றவாறு பொருத்தமான ஆடைகளை அணிதல்.

(1x3=30 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) பயன்பாட்டுக் காரணியில் ஒன்றான பொருத்தப்பாடு என்பதை வரைவிலக்கணப்படுத்துக?
    2) வடிவமைப்புக் கோட்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விளக்குக.
    3) உட்புறவெளியை நிர்மாணிக்கும்போது பயன்படுத்தும் துணைக்கூறுகளையும், பிறதுணைச் சாதனங்களையும் இரண்டு வீதம் குறிப்பிடுக.
    4) புரத மிகை நிரப்பல் என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
    5) உணவுச் சமிபாட்டுத் தொகுதியின் பகுதிகளை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.
    6) உணவில் அடங்கியுள்ள இரும்பு இரண்டு வகைப்படும். அவற்றைக் குறிப்பிட்டு அவற்றுக்கு இரு உதாரணம் வீதம் குறிப்பிடுக.
    7) போசணைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென செயற்படும் அரசு சாரா நிறுவனங்கள் நான்கைக் குறிப்பிடுக.
    8) நார்களை முற்பரிகரிப்பு செய்யும் முறையை ஒழங்குமுறையில் தருக.
    9) ஆடைத் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை படிமுறைகளில் குறிப்பிடுக?
    10) பயன்தரு தன்மையற்ற தொடர்பாடலின் பாதகமான விளைவுகள் நான்கைக் குறிப்பிடுக.

(10x2=20 புள்ளிகள்)

02. 1) சூழமைவில் பௌதிகச் சூழல் இரண்டாக வகைப்படுத்தப்படும். அவற்றைக் குறிப்பிட்டு அவை தொடர்பாக விளக்குக.
    2) வர்ணங்களின் இயல்புகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.
    3) கட்டடமொன்றை அமைக்கும்போது உள்ளக வெளியை வடிவமைப்பதன் முக்கியத்துவத்தை விளக்குக.
    4) தொழிற்படுதன்மை எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.

(3+3+2+2=10 புள்ளிகள்)

03. 1) கொழுப்பமிலங்களை வகைப்படுத்தி அவற்றை விளக்குக.
    2) நாளாந்த உணவு வேளையில் நார்ப்பொருட்களை உள்ளடக்குவதன் முக்கியத்துவம் 3ஐக் குறிப்பிட்டு விளக்குக.
    3) புரதத்தை இனங்காண்பதற்கான பரிசோதனை ஒன்றைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.
    4) உணவின் ஒரு கூறு நீர் என்ற வகையில் நீரின் முக்கியத்துவம் நான்கைக் குறிப்பிடுக.

(3+3+2+2=10 புள்ளிகள்)

04. 1) அல்லூட்ட நிலை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.
    2) உணவு வேளையை திட்டமிடுவதில் மூலாதாரமாக அமையும் காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.
    3) உயர் குருதியமுக்கம் என்றால் என்ன? என்பதை வரையறுக்க அவற்றின் அறிகுறிகளைக் குறிப்பிடுக.
    4) இரைப்பை அழற்சி நோய் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டையும் அதனை தடுப்பதற்கு மேற்கொள்ளும் வழிமுறை இரண்டையும் குறிப்பிடுக.

(3+3+2+2=10 புள்ளிகள்)

05\. 1) உணவு நஞ்சாதல் எனும் பதத்தை விளக்கி அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கைக் குறிப்பிடுக.

1) சமயலறையில் ஏற்படும் விபத்துக்கள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுக்கு முதலுதவி செய்யும் முறையையும் விளக்குக.

2) உணவைக் கொள்வனவு செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கைக் குறிப்பிடுக.

3) மேலேத்தேய உணவு பரிமாறல் முறைகளைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக.

(3+3+2+2=10 புள்ளிகள்)

06\. 1) விசேட சந்தர்ப்பங்களில் செய்யப்படும் நேர்த்தியாக்கல் முறைகள் நான்கைக் குறிப்பிட்டு இரண்டை விளக்குக.

2) பத்திக் முறையில் அச்சிடும் செயன்முறையை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

3) ஆடைக் கைத்தொழிலுடன் இணைந்த வேறு கைத்தொழில்கள் நான்கைக் குறிப்பிடுக.

4) குறும்பாவாடை ஒன்றை தைக்கும் முறையை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(3+3+2+2=10 புள்ளிகள்)

07\. 1) வினைத்திறனான தொடர்பாடலின் சிறப்பம்சங்கள் நான்கைக் குறிப்பிட்டு இரண்டை விளக்குக.

2) செயலூக்கமுள்ள ஓய்வுநேரச் செயற்பாடுகளை எத்தனை பிரிவாக வகைப்படுத்தலாம் அவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.

3) நேர்முகப் பரீட்சைக்கு முன்னதாக விண்ணப்பதாரி நிறுவனத்தின் எவ்வாறான விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

4) தொலைபேசிப் பயன்பாட்டின்போது செய்ய வேண்டியவை நான்கைக் குறிப்பிடுக.

(3+3+2+2=10 புள்ளிகள்)

08\. பின்வரும் தலைப்புக்களில் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1) உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

2) தொற்றா நோய்களில் ஒன்றான நீரிழிவு

3) வணிகத் தையல் முறைகள்

4) பருத்தித்துணியை மினுக்குவதால் கிடைக்கும் அனுகூலம்

(4x2½=10 புள்ளிகள்)